முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1556

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.01.2024,** செவ்வாய்கிழமை

1. தர்மத்தின் காவலனே அரங்கா
   தனிபெரும் சக்திகொண்ட தேசிகா
   கர்மத்தை போக்கி கலியுகத்தார்க்கு
   கருணையோடு ஞானம் தருகின்ற அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 17 ம் நாள், 02.01.2024, செவ்வாய்கிழமை)
   வரமென அரங்கன் திருவடி பற்றி
   வையகத்தார் ஞானம் பயின்றால்
3. தருகின்றேன் ஆறுமுகன் அழியாமையை
   தானவர்களெல்லாம் ஞானிகளாகின்ற வண்ணம் அற்புதத்தை
   அற்புதத்தை அரங்கனைக் கொண்டு ஆறுமுகன்
   அகிலத்தில் இனிதே நடத்துகின்றேன்
4. நடத்தவே ஓங்காரக்குடில் நோக்கி
   ஞானம் பயில உலகோர் தொடர்ந்துவர
   தடையற அவர்கள் தேறுவதோடு
   தாமுரைப்பேன் அவர்கள் குடியவர்க்கும் ஞானம்
5. தானாக அரங்கன் தீட்சையாலும் சக்தியாலும் பெருகி
   தரணியில் அற்புதம் நிகழக்கூடும்
   ஆகவே அரங்கனுக்குள் யானிருந்து அற்புதம் நடத்த
   அன்பர்கள் மனமுவந்து அரங்கனை நோக்கிவந்து சரணாகதி கொண்டு
6. ஆற்றல்பட தர்மமும் ஞானமும்
   அளவிலா சக்தியாகத் தா என வேண்டி
   வேண்டியே அரங்கன் வழி தொடர்ந்தால்
   வினைவிலகி உலகோர் ஞானிகளாக

7. களங்கமற ஓங்காரக்குடிலின் சக்தியாலும்
கருணைமிக்க அரங்கன் ஆசியாலும்
அடைந்து உலகோர் ஞானிகளாவர்
அகில மாற்றம் தருவர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—